புத்தக்கனி

O-,83 MVM1,P
N22
178121

4

1224

16 MAR 1922

ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ண சகாயம்.

புத்திரக் கொம்மி.

இஃது

கருவூர் மகா ா-ஸ்ரீ ரா. இராமசுப்பையரவர்களின்

விருப்பின்படி

ஷையூர் மிராஸ்தாரரும்,

லேட் ஹானரெரி மாஜிஸ்ட்ரேட்டுமான

வே. சு. வரதராஜமுதலியார்

அவர்கள் இயற்றியதை,

கருவூர் "விவேகபானு அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பெற்று,

...ஸ்ரீரங்கநாதர் சந்நிதியில்

...கேற்றப்பெற்றது.

1922.

0-,83MVM1,P
N22
17812

ஊக்கத்தைக் கைவிடல் கூடாதே—அதை
ஊன்றிப்பாராமல் நீ ஓடாதே
காக்கைக் கண்ணுக் கோர் மணிதந்தருளிய
காகுஸ்தனைத் துதி புத்திரனே. (6)

எண்ணு மெழுத்துமே கண்ணாகும்—அது
எண்ணில் சுவைதரும் பண்ணாகும்
மண்ணுல கேழிற்கும் வானுல கேழிற்கும்
வந்தளந் தோனைப்பார் புத்திரனே. (7)

ஏவாத முன்செய்வோன் பிள்ளையாவான்—மற்ற
ஏவின பின்செய்வோன் கிள்ளையாவான்
தேவாதி தேவனைச் சென்றுநீ சேவித்தால்
தேவன் பதஞ் சேர்வாய் புத்திரனே. (8)

ஐயமும் பிச்சையு மீவாயே—இன்றேல்
ஐயமற மிடி யாவாயே
மெய்யடியார்களை மேவி யழைக்கின்ற
மெய்யனையே துதி புத்திரனே. (9)

ஒத்தவிடத்தினிற் பள்ளி கொள்வாய்—யாரும்
ஒப்பும் மொழிகளைக் கற்றுக் கொள்வாய
இத்திக்கும் அத்திக்கும் எத்திக்கும் வ்யாபனும்
ஈசனையே துதி புத்திரனே. (10)

ஓதுதல் என்றுமொழியாதே—அதை
ஓராமல் விட்டே யழியாதே
சாதுக்களைக் காத்துச் சாயுஜ்ய மீகின்ற
சாரங்கனைத் துதி புத்திரனே. (11)

ஔவியம் பேசுத லீனமாகும்—அந்த
ஔவைசொல் ஏற்பதே ஞானமாகும்
பௌவத்தைத் தாண்டிப்போய்ப் பாவியைக் கொன்
பாதமே பற்றுவாய் புத்திரனே. [-றிட்டான்

பெற்றதாய் சொல்லைநீ தள்ளாதே—அவள்
பேதையளென்றெண்ணிக் கொள்ளாதே
பெற்றங்கள் மேய்த்திட்ட பெம்மான்றன் பாததைதைப்
பேசிடலாம் வாராய் புத்திரனே. (13)

எந்த வுயிரையுங் கொல்லாதே—கொன்றே
எண்ணில் நரகத்திற் செல்லாதே
நிந்தனைசெய் சிசு பாலனைக் கொன்றிட்ட
நீர்மையனைத் துதி புத்திரனே. (14)

சோம்பலுந் தூக்கமு மாகாதே—அத்தால்
சோர்வை யடைந்துநீ நோகாதே
ஓம்பரம்ம நாராய ணயவென் றுன்னுள்ளே
ஓலமிட் டேத்துவாய் புத்திரனே. (15)

வம்பு வழக்குகள் ஆகாதே—கெட்ட
வாதுசெய்வோரிடம் போகாதே
இம்ப ரும்பரெல்லாம் ஏத்தித் துதிக்கின்ற
எம்பிரானைத் துதி புத்திரனே. (16)

எப்போதும் பொய்தன்னைப் பேசாதே—செவி
ஏற்கும் நிசம் சொல்லக் கூசாதே
தப்போதச் சொன்னவத் தானவனைக் கொன்ற
தாடாளனைத் துதி புத்திரனே. (17)

தாயினுந் தெய்வமே இல்லையென்பாய்—உயர்
தந்தையினுங் குரு இல்லையென்பாய்
வாயினுள் வையகங் காட்டி யருளிய
மாயவனைத் துதி புத்திரனே. (18)

கங்குலில் எங்கும்நீ போகாதே — அங்கே
கல்லு முள்ளும் பட்டு நோகாதே
செங்கண்மால் செம்பதம் சேவிப்பவர்க் கென்றும்
சேமவீடா மென்பாய் புத்திரனே. (19)

அச்சமின்றி யாற்றி லாடாதே — பின்
பழுந்திக் கிடந்துள்ளே வாடாதே
பச்சை மலைபோன்ற பாண்டவர் தூதனை
பக்தி செயப்பாராய் புத்திரனே. (20)

சுத்த மாகயாவும் வைக்கவேண்டும் — அது
சுகமென் றுன் னுள்ளத்தில் தைக்கவேண்டும்
சித்தத்தைத் தேக்கியச் சீதரன் தாளுக்குன்
சிந்தை மலரணி புத்திரனே. (21)

பேர்கா விடந்தனிற் போகாதே — அங்கே
போயுள்ளம் வாடுதல் ஆகாதே
சாகா வரம்பெற்ற சண்டாளரைப் போரிற்
சாய்த்தவனைத் துதி புத்திரனே. (22)

பிடிவாதஞ் செய்வதுங் கூடாதே — துஷ்ட
பிள்ளைக ளோடேநீ யாடாதே
அடியொன்றில் பூமி யளந்தவன் தாளுக்கே
அடிமை செய்யவேண்டும் புத்திரனே. (23)

கோமக னுக்கினை மீறாதே — அவன்
கோபத்தா லாம்புண்கள் மாறாதே
நாமகள் நண்பனை நாபியிற் கொள்பத்ம
நாபனையே துதி புத்திரனே. (24)

பக்ஷியைக் கூட்டி லடைக்காதே — அந்தப்
பாவத்தால் மோக்ஷங் கிடைக்காதே
குக்ஷியில் யாவுங்குன் றாமல்வைத்துப் பின்கொ
டுத்தவனைத் துதி புத்திரனே. (25)

மிதமிஞ்சி யாவையும் உண்ணாதே — சுவை
மேவி யுவந்ததென் றெண்ணாதே
கதமென்றுங் கொள்ளாத காருண்ய வள்ளலைக்
கண்குளிரப் பாராய் புத்திரனே. (26)

சண்டை முகத்தினில் நில்லாதே — அந்த
சம்பந்தமே என்றும் பொல்லாதே
அண்டர்கள் போற்றிடு மச்சுதன் பாதத்தை
அன்போடு நாடுவாய் புத்திரனே. (27)

பாவ மெந்நாளும் புரியாதே — அந்தப்
பாவிக ளோடு திரியாதே
தேவரும் வேதனும் பேயனுங் காணாத
தேவனைப் போற்றுவாய் புத்திரனே. (28)

கோள்சொல்லி வெம்பகை மூட்டாதே — கொடி
யோனென வுன்பெயர் நாட்டாதே
வேள்விக்காக விஸ்வா மித்திரன் பின்சென்ற
வேதாந்தனைத் துதி புத்திரனே. (29)

44
1131